## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 119/மா/2025
நாள் 09.03.2026

R.P. இரமேஷ்,
சத்துவாச்சாரி,
வேலூர். — முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
வேலூர் மாநகராட்சி — எதிர்மனுதாரர்

வேலூர்–632 009, சத்துவாச்சாரி, Phase-3 வள்ளலார், கதவு எண் 484 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.P.இரமேஷ் என்பவரின் 12.02.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.02.2025 அன்று பெறப்பட்டு 119/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

வேலூர்–632 009, சத்துவாச்சாரி, Phase-3 வள்ளலார், கதவு எண் 484 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.P.இரமேஷ் என்பவர் 12.02.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"I am writing to formally lodge a complaint regarding unauthorized and unlawful activities carried out in Corporation area, Ward No.21, Sathuvachari Zone-2, Vellore. The road laying work in the aforementioned area has been executed without properly addressing encroachments, and it appears that certain officials have acted in favour of encroachers, leading to significant legal and environmental violations.

**1. Illegal Encroachment Removal Favouring Encroachers:**

- Despite my formal complaint to the Commissioner of Greater Municipal Corporation, Vellore, the authorities have wantonly removed encroachments in a selective manner, thereby facilitating the encroachers instead of ensuring a fair and lawful process.
- The road laying project was undertaken without due diligence and necessary permissions.

**2. Unauthorized Activities by the Work Contractor and Municipal Engineers:**

- The contractor responsible for the work, namely Saravanan and Kutty, has illegally uprooted trees without obtaining requisite permissions from competent authorities.
- The felled trees, valued at approximately Rs.5 lakhs, were unalwfully sold, causing financial loss to the public exchequer and envrionmental damage.
- The greater municipal corporation engineers, namely Selvaraj and Arumugam, were also involved in the illegal tree cutting and failed to remove encroachments as required by law.
- As per municipal regulations, only the authorized committee has the power to grant permission for tree cutting in corporation areas. However, the committee failed in its duty, and unauthorized tree cutting was carried out.

**3. Failure of Authorities to Take Action:**

- Multiple complaints have been submitted to the Zonal Officer and the Commissioner of Greater Municipal Corporation, Vellore, yet no appropriate action has been taken against the responsible individuals.
- The inaction of these officials indicates gross negligence and possible collusion with the contractor.

**4. Substandard Road Construction Favouring Encroachers:**

- The Corportion officials, in collusion with the contractors, are attempting to lay the road without removing the encroachments, reducing the road's width and negatively impacting the public.
- There are attempts to connect streets and construct roads illegally to benefit encroachers, resulting in poor infrastructure planning and financial loss to the government.
- The construction work is being carried out in the dark hours of night to avoid scrutiny.

**Prayer**

In light of the above grievances, I humbly request your good office to:

(1) Conduct an impartial inquiry into the unlawful encroachment removal process and unauthorized activities carried out under the supervision of municipal officials.

(2) Initiate legal proceedings and appropriate disciplinary action against the concerned officials and contractors Saravanan and Kutty along with engineers Selvaraj and Arumugam.

(3) Recover the financial loss incurrred due to the illegal sale of felled trees and penalize those responsible.

(4) Take Action against the municipal committee for failing to exercise their authority in preventing unauthorized tree cutting.

(5) Ensure strict adherence to legal procedures in future municipal projects to prevent such irregularities.

(6) Halt the ongoing road construction until a thorough investigation is completed to prevent further financial loss and environmental damage.

(7) Recover the loss of government funds from the responsible officials and contractors and ensure they compensate for the environmental and financial damages caused.

Reference to Ombudsman's Powers and Functions:
As per the functions and powers of the Ombudsman:

- The Ombudsman is authorized to enquire into written complaints involving corruption or maladministration of a public servant or a local body.
- If the irregularity involves a criminal offense, the matter can be referred to an appropriate investigating agency.
- In cases involving loss of public funds, the Ombudsman may order the recovery of such losses from those responsible.
- For negligence or dereliction of duty, departmental action can be recommended against the responsible officials.
- The Ombudsman has powers akin to a civil court, including summoning witnesses, requisitioning documents, and issuing directives.

I trust your esteemed office will take prompt and necessary action to uphold justice and accountability. Kindly acknowledge receipt of this complaint and keep me informed of any further proceedings." எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. வேலூர் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி செயற்பொறியாளர் (ம) உதவி ஆணையர் (பி) தனது கடிதம் ந.க. எண் 1035/2025/இ1/ம2 நாள் 14.05.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில்–

| வ. எண் | கேள்வி | பதில் |
|---|---|---|
| 1. | **Illegal Encroachment Removal Favouring Encroachers:**<br>a) Despite my formal complaint to the Commissioner of Greater Municipal Corporation, Vellore, the authorities have wantonly removed encroachments in a selective manner, thereby facilitating the encroachers instead of ensuring a fair and lawful process.<br>b) The road laying project was undertaken without due diligence and necessary permissions. | (a) ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஏதுவாக எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.<br>(b) இப்பணியினை மேற்கொள்ள சீர்மிகு நகர திட்ட குழுவினரால் உரிய அனுமதி பெற்ற பின்னரே சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 2. | **Unauthorized Activities by the Work Contractor and Municipal Engineers:**<br>a) The contractor responsible for the work, namely Saravanan and Kutty, has illegally uprooted trees without obtaining requisite permissions from competent authorities. | • மழைநீர் வடிகால் பணி மேற்கொள்ளும் இடத்தின் வெளிபகுதியில் உள்ள மரங்களின் அடியில் வேர் பிடிப்பு இல்லாத காரணத்தினால் மரங்கள் வேரோடு சரிந்து விழுத்து விட்டது. |

| | | |
|---|---|---|
| | b) The felled trees, valued at approximately Rs.5 lakhs, were unlawfully sold, causing financial loss to the public exchequer and environmental damage. | • வேரோடு சரிந்த மரங்களை மதிப்பீடுகள் மேற்கொள்வதற்குள் அப்பகுதி மக்களால் துண்டிடப்பட்டு எடுத்து செல்லப்பட்டது கள ஆய்வின் போது தெரிய வந்தது. |
| | c) The greater municipal corporation engineers, namely Selvaraj and Arumugam, were also involved in the illegal tree cutting and failed to remove encroachments as required by law. | • மனுதாரரால் குறிப்பிட்டபடி பொறியியல் பிரிவு பொறியாளர்கள் யாரும் எவ்வித முறைகேட்டில் ஈடுபடவில்லை. |
| | d) As per municipal regulations, only the authorized committee has the power to grant permission for tree cutting in corporation areas. However, the committee failed in its duty, and unauthorized tree cutting was carried out. | • வேர் பிடிப்பு இல்லாமல் சரிந்து விழுந்த மரங்களை மதிப்பீடுகள் மேற்கொள்வதற்குள் பொதுமக்களால் துண்டித்து எடுத்து செல்லப்பட்டதால் இதனை முறையாக உரிய துறை அதிகாரிகளிடம் தகவல் அளித்து மதிப்பீடு செய்ய இயலவில்லை |
| 3. | **Failure of Authorities to Take Action:**<br>a) Multiple complaints have been submitted to the Zonal Officer and the Commissioner of Greater Municipal Corporation, Vellore, yet no appropriate action has been taken against the responsible individuals. | • பணிதளத்தில் பொதுமக்களால் மேற்கொள்ளப்பட்ட செயலால் அதிகாரிகளால் மேல்நடவடிக்கை எடுக்க இயலவில்லை. |
| | b) The inaction of these officials indicates gross negligence and possible collusion with the contractor. | • பணிதளத்தில் நடைபெற்ற எதிர்பாராத செயலில் அதிகாரியின் செயலற்ற தன்மை, அலட்சியம் ஏதுமில்லை. மேலும் ஒப்பந்ததாரருடன் எவ்விதமான கூட்டு சதியிலும் ஈடுபடவில்லை. |
| 4. | **Substandard Road Construction Favouring Encroachers:**<br>a) The Corportion officials, in collusion with the contractors, are attempting to lay the road without removing the encroachments, reducing the road's width and negatively impacting the public. | • மனுதாரரால் குறிப்பிடும் சாலையானது தமிழ்நாடு வீட்டு வாரியத்தினால் ஒப்படைப்பு செய்யப்பட்ட அகலத்திற்கு உட்பட்டே மழைநீர் வடிகால் மற்றும் சாலை அமைக்கப்பட்டுள்ளது. |
| | b) There are attempts to connect streets and construct roads illegally to benefit encroachers, resulting in poor infrastructure planning and financial loss to the government. | • மழைநீர் வடிகால் மற்றும் சாலை அமைப்பதில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஏதுவாக எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் இப்பணி மேற்கொண்டபின் உரிய மூன்றாம் நபர் அறிக்கை பெறப்பட்டுள்ளது. இதில் அரசிற்கு எவ்விதமான இழப்பும் ஏற்படவில்லை. |

| | | |
|---|---|---|
| | c) The construction work is being carried out in the dark hours of night to avoid scrutiny. | • பணிகள் ஏதும் இரவில் மேற்கொள்ளவில்லை. |

எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 15.12.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 15.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"1) வேலூர் மாநகராட்சி சத்துவாச்சாரி வார்டு எண்.21–ல் PF சாலை அரிஓம் 4வது தெரு 9 மீட்டர் அகலம் உள்ளது. அதில் கட்டிடங்கள் மற்றும் கமர்சியல் Complex கட்டி ஆக்கிரமிப்பு செய்ததனால் 7 மீட்டர் ஆக சுருங்கிவிட்டது. இதனால் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இச்சாலைகளில் ஆக்கிரமிப்பினை அகற்றாமல் வேலூர் மாநகராட்சி அலுவலர்கள் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு சாதகமாக, இருபுறமும் கால்வாய் கட்டியும், சாலையும் அமைத்துள்ளனர். இது குறித்து வேலூர் மாநகராட்சிக்கு கால்வாய், சாலை அமைப்பதற்கு முன்பே, 20 முறைகளுக்கு மேல் புகார் மனு அளித்துள்ளேன்.

2) மேலும், E B சாலை 7 மீட்டர் அகலம் உள்ளது. அச்சாலை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு 4 மீட்டர் ஆக சுருங்கிவிட்டது. இந்த பகுதியில் பொது இடங்கள் பூங்கா மற்றும் சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்பினை குறித்து வேலூர் District Court (JM2)ல் வழக்கு CC எண்.343/2014 மற்றும் 344/2014 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது.

3) மேற்கண்ட சாலைகள் கால்வாய்கள் எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் கோராமலும், அனுமதியின்றியும், தரமற்று போடப்பட்டுள்ளது.

4) அச்சாலைகளில் உள்ள 20க்கு மேற்பட்ட பழைமையான மரங்கள் அனுமதியில்லாமல் வெட்டப்பட்டுள்ளது. இதனை வேலூர் மாநகராட்சி அலுவலர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

5) எனவே, வணிக வளாகம் கட்டியுள்ள நபர்களுக்கு ஆதரவாக ஆக்கிரமிப்புகளை அகற்றாமலும், உரிய அனுமதியில்லாமல் தரமற்ற சாலைகளை அமைத்ததற்கும், அனுமதியில்லாமல் மரங்களை வெட்டி இழப்பீடு செய்ததற்கும் வேலூர் மாநகராட்சி சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கையும் மரங்களை வெட்டியதற்கு உரிய அபராதம் விதிக்கவும், இது குறித்து மூன்றாம் நபர் விசாரணை மேற்கொள்ளவும், வேலூர் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்."

6. எதிர்மனுதாரர் தரப்பில் வேலூர் மாநகராட்சி இளநிலை பொறியாளர் 15.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"வேலூர் மாநகராட்சி, சத்துவாச்சாரி வார்டு எண்.21, மண்டலம்–2ல் கூறப்படும் முறைகேடுகள் குறித்து பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது :–

1. சீர்மிகு நகர திட்ட குழுவினரால் உரிய அனுமதி பெற்ற பின்னரே சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
2. மனுதாரரால் குறிப்பிடும் சாலையானது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினரால் ஒப்படைப்பு செய்யப்பட்ட அகலத்திற்கு உட்பட்டே மழைநீர் வடிகால் மற்றும் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

3. மழைநீர் வடிகால் மற்றும் சாலை அமைப்பதில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஏதுவாக எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் இப்பணி மேற்கொண்டபின் உரிய மூன்றாம் நபர் அறிக்கை பெறப்பட்டுள்ளது. இதில் அரசிற்கு எவ்விதமான இழப்பும் ஏற்படவில்லை.

4. மழைநீர் வடிகால் பணி மேற்கொள்ளும் இடத்தின் வெளிபகுதியில் உள்ள மரங்களின் அடியில் வேர் பிடிப்பு இல்லாத காரணத்தினால் இரண்டு மரங்கள் வேரோடு சரிந்து விழுந்து விட்டது என கள ஆய்வின் போது தெரியவந்தது.

5. வேர் பிடிப்பு இல்லாமல் சரிந்து விழுந்த மரங்களை மதிப்பீடுகள் மேற்கொள்வதற்குள் பொதுமக்களால் துண்டித்து எடுத்து செல்லப்பட்டது கள ஆய்வில் தெரியவந்தது. எனவே, இதனை முறையாக உரிய துறை அதிகாரிகளிடம் தகவல் அளித்து மதிப்பீடு செய்ய இயலவில்லை. எத்தனை மரங்கள் வெட்டப்பட்டன என்பது குறித்து விவரம் எனக்கு தெரியாது.

மனுதாரர் குறிப்பிட்ட சாலையானது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஒப்படைப்பு செய்யப்பட்டது. ஆக்கிரமிப்பு சம்மந்தமானவை டவுன் பிளானிங் பிரிவிற்கு சம்மந்தப்பட்டது. இது குறித்த விவரம் எனக்கு தெரியாது என்ற விவரத்தை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான வேலூர் மாநகராட்சி இளநிலை பொறியாளர் மனுதாரர் புகார் தெரிவித்த சாலை ஆக்கிரமிப்பு குறித்து தனக்கு விவரம் தெரியாது என தெரிவித்ததனைத் தொடர்ந்து, எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 20.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 31.12.2025 நாளிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு நகலிட்டு எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்டது.

8. மனுதாரர் 20.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"இம்முறை மன்றத்தில் 15.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நான் அளித்த வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக பின்வரும் விவரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

1) வேலூர் மாநகராட்சி சத்துவாச்சாரி வார்டு எண்.21 PF சாலை அரிஓம் சாலை 4வது தெரு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 1984ம் வருடம் வேலூர் மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வரைபடத்தின்படி அத்தெருவானது 9 மீட்டர் அகலம் கொண்டதாகும். ஆனால் தற்போது சாலையினை ஆக்கிரமித்து வணிக வளாகம் கட்டப்பட்டதால் 7 மீட்டர் ஆக சுருங்கிவிட்டது. தற்போது மாநகராட்சியால் இன்றைய விசாரணையில் 9 மீட்டர் அகலம் கொண்ட சாலையின் இருபுறமும் மழைநீர் வடிகால் கால்வாய் கட்டப்பட்டதால், சாலையில் அகலம் 7 மீட்டர் என்பது தவறான தகவலாகும். எனவே, வரைபடத்தின்படி வருவாய்த் துறையினர் சாலையினை அளவீடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். இதற்கான PF சாலை வரைபட நகலினை சமர்ப்பிக்கிறேன்.

2) E B நகர் சாலை வரைபடத்தின்படி 7 மீட்டர் அகலம் கொண்டதாகும். ஆனால் பூங்கா, கால்வாய் மற்றும் திறவிடம் பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதால், அச்சாலை 4 மீட்டராக சுருங்கிவிட்டது. இதுகுறித்து வேலூர் District Court (JM2)ல் வழக்கு CC எண்.343/2014 மற்றும் 344/2014 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. இவ்வழக்கு குற்றவியல் வழக்காகும். மாநகராட்சியிடம் மீட்டெடுக்க தடையாணை ஏதுமில்லை. மேலும் முறைகேடான பதிவுகள் என சார்பதிவாளர் அலுவலக வில்லங்கத்தில் முறைகேடான ஆவணம் என குறிப்பு உள்ளது.

3) மேற்கண்ட ஆக்கிரமிப்புக்கான ஆவணங்கள் போலியாக தயாரிக்கப்பட்டதாகும். இது குறித்து வேலூர் நடுவர் நீதிமன்றத்தில் காவல் துணை கண்காணிப்பாளரால் அளித்த இறுதி அறிக்கையின் நகலினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

4) தற்போது என்னால் தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்களுக்கு மனு அளித்த பின் வேலூர் மாநகராட்சியால் ஆவணங்கள் வணிக வளாக ஆக்கிரமிப்புதாரர்களுக்கு ஏதுவாக திருத்தப்பட்டுள்ளன.

5) சாலையில் இருந்த மரங்கள் முறைகேடாக வெட்டப்பட்டு எடுத்து செல்லப்பட்டுள்ளன. இதற்கு மாநகராட்சி ஊழியர்கள் உடந்தையாக இருந்துள்ளார்கள். இதற்கான புகைப்பட நகல்களை சமர்ப்பிக்கிறேன்.

6) மேற்கண்ட புகார் குறித்து 27 மனுக்களுக்கும் மேலாக அளித்தும் வேலூர் மாநகராட்சியின் உயர் அலுவலர்களில் கவனத்திற்கு எடுத்துச் சென்றும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அலுவலர் பணியில் போதிய கவனமும் ஈடுபாட்டுடன் செயல்படவில்லை.

7) மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள சாலை முறையான திட்ட மதிப்பீடு, தரம், டெண்டர் ஆகியவை பின்பற்றப்படவில்லை.

8) மரங்கள் அகற்றப்பட்டதற்கு எவ்வித ஆவணமும் அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படவில்லை. மரம் வெட்டிட எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை, இது மாநகராட்சி மரங்கள் பாதுகாப்பு சட்ட மீறலாகும்.

எனவே, எனது புகார் மீது வேலூர் மாநகராட்சியின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், ஏற்கனவே நான் 15.12.2025 அன்று வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மூன்றாம் நபர் விசாரணை மேற்கொள்ளவும் உரிய உத்தரவினை வழங்குமாறும் பொது நலன் கருதி இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

9. எதிர்மனுதாரரான வேலூர் மாநகராட்சி ஆணையாளர் 20.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''இம்முறை மன்றத்தில் 15.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் வேலூர் மாநகராட்சி சார்பாக இளநிலை பொறியாளர் அளித்த வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக பின்வரும் விவரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்:

1) வேலூர் மாநகராட்சி சத்துவாச்சாரி வார்டு எண்.21ல் PF சாலை, அரி ஓம் சாலை 4வது தெரு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 1984ம் வருடம் வேலூர் மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் வரைபடத்தின்படி அத்தெருவானது 9 மீட்டர் அகலம் கொண்டதாகும். சாலையின் இருபுறமும் மொத்தம் 3 மீட்டர் அகலத்திற்கு மழைநீர் வடிகால்வாய் கட்டிய பிறகு 6 மீட்டர் அகலத்திற்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை.

2) மேற்கண்ட PF சாலை மனைப்பிரிவில் உள்ள பூங்காக்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி தாக்கீதுகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3) EB சாலை வரைபடத்தின்படி 7 மீட்டர் அகலம் கொண்டதாகும். அச்சாலையில் இருந்த ஆக்கிரமிப்புகள் குறித்து வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது.

4) வேலூர் மாநகராட்சியில் உள்ள ஆவணங்களில் மரங்களின் எண்ணிக்கை 2 ஆக பதியப்பட்டுள்ளது. மரம் வெட்டப்பட்டது குறித்து தகவல் ஏதும் வேலூர் மாநகராட்சி பெறப்படாத நிலையிலும் வெட்டப்பட்ட மரத்தினை பொதுமக்கள் எடுத்து சென்றுவிட்டார்கள் என்ற நிலையிலும் வெட்டப்பட்ட மரங்களை மதிப்பீடு செய்ய இயலவில்லை.

5) PF சாலையோரத்தின் கழிவு நீர் கால்வாய் தரமாக போடப்பட்டு மூன்றாம் தரப்பினால் ஆய்வு செய்யப்பட்டு சான்றிதழ் அளிக்கப்பட்டதின் பேரில் தொகை பட்டுவாடா செய்யப்பட்டது. இதில் முறைகேடு ஏதும் இல்லை.

எனவே, மனுதாரர் தெரிவித்த புகார் தொடர்பாக எவ்வித விதிமீறலும் இல்லை என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

10. மனுதாரரின் மனு, வாக்குமூலங்கள், ஆவணங்கள் வேலூர் மாநகராட்சி மண்டலம் 2ன் உதவி செயற்பொறியாளர் (ம) உதவி ஆணையாளர் (பி)–ன் அறிக்கை, இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் வேலூர் மாநகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

வேலூர் மாநகராட்சி சத்துவாச்சாரி வார்டு எண்.21–ல் PF சாலை அரிஓம் 4வது தெரு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 1984ம் வருடம் வேலூர் மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்யப்பட்ட போது, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வரைபடத்தின்படி அத்தெருவானது 9 மீட்டர் அகலம் கொண்ட சாலையினை ஆக்கிரமித்து வணிக வளாகம் கட்டப்பட்டதால் 7 மீட்டர் ஆக சுருங்கிவிட்டது என்பதும், E B நகர் சாலை வரைபடத்தின்படி 7 மீட்டர் அகலம் கொண்ட சாலையில் உள்ள பூங்கா, கால்வாய் மற்றும் திறவிடம் பகுதிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதால், அச்சாலை 4 மீட்டராக சுருங்கிவிட்டது என்பதும், இதுகுறித்து வேலூர் District Court (JM2)ல் வழக்கு CC எண்.343/2014 மற்றும் 344/2014 தொடரப்பட்டு நிலுவையில் உள்ள இவ்வழக்கு குற்றவியல் வழக்கானதால், மாநகராட்சியிடம் மீட்டெடுக்க தடையாணை ஏதுமில்லை என்பதும், முறைகேடான பதிவுகள் என சார்பதிவாளர் அலுவலக வில்லங்கத்தில் முறைகேடான ஆவணம் எனகுறிப்பு உள்ளது என்பதும், சாலையில் இருந்த மரங்கள் முறைகேடாக வெட்டப்பட்டு எடுத்து செல்லப்பட்டுள்ளன என்பதும், இதற்கு மாநகராட்சி ஊழியர்கள் உடந்தையாக இருந்துள்ளார்கள் என்பதும், மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள சாலை முறையான திட்ட மதிப்பீடு, தரம், டெண்டர் ஆகியவை பின்பற்றப்படவில்லை என்பதும், இம்முறைமன்ற நடுவத்தால் 20.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் வேலூர் மாநகராட்சி சார்பில் 9 மீட்டர் அகலம் கொண்ட சாலையின் இருபுறமும் மழைநீர் வடிகால் கால்வாய் கட்டப்பட்டதால், சாலையின் அகலம் 7 மீட்டர் என்று குறிப்பிட்டது தவறான தகவலாகும் என்பதால், இவ்வரைபடத்தின்படி வருவாய்த் துறையினர் சாலையினை அளவீடு செய்யுமாறும், மேற்கண்ட ஆக்கிரமிப்புக்கான ஆவணங்கள் போலியாக தயாரிக்கப்பட்டது குறித்து வேலூர் நடுவர் நீதிமன்றத்தில் காவல் துணை கண்காணிப்பாளரால் அளித்த இறுதி அறிக்கையின் நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், தற்போது தன்னால் தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்களுக்கு மனு அளித்த பின் வேலூர் மாநகராட்சியால் ஆவணங்கள் வணிக வளாக ஆக்கிரமிப்புதாரர்களுக்கு ஏதுவாக திருத்தப்பட்டுள்ளன என்பதும், எனவே, ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் மற்றும் உரிய அனுமதியில்லாமல் தரமற்ற சாலைகளை அமைத்ததற்கும், அனுமதியில்லாமல் மரங்களை வெட்டி இழப்பீடு செய்ததற்கும் வேலூர் மாநகராட்சி சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கையும் மரங்களை வெட்டியதற்கு உரிய அபராதம் விதிக்கவும், இது குறித்து மூன்றாம் நபர் விசாரணை மேற்கொள்ளவும், வேலூர் மாநகராட்சி ஆணையர்

அவர்களுக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

வேலூர் மாநகராட்சி, சத்துவாச்சாரி வார்டு எண்.21, மண்டலம்–2ல் மனுதாரரால் குறிப்பிடும் சாலையான PF சாலை அரிஓம் சாலை 4வது தெரு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினரால் ஒப்படைப்பு செய்யப்பட்ட அகலத்திற்கு உட்பட்டு நகர திட்ட குழுவினரால் உரிய அனுமதி பெற்ற பின்னரே மழைநீர் வடிகால் மற்றும் சாலை பணி மேற்கொள்ளப்பட்டது என்பதும், PF சாலையில் உள்ள மனைப்பிரிவில் உள்ள பூங்காக்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி தாக்கீதுகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும், E B சாலையில் இருந்த ஆக்கிரமிப்புகள் குறித்து வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்பதும், மழைநீர் வடிகால் மற்றும் சாலை அமைப்பதில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஏதுவாக எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும், இப்பணி மேற்கொண்டபின் உரிய மூன்றாம் நபர் அறிக்கை பெறப்பட்டுள்ளது என்பதும், இதில் அரசிற்கு எவ்விதமான இழப்பும் ஏற்படவில்லை என்பதும், வேலூர் மாநகராட்சியில் உள்ள ஆவணங்களின்படி, மரங்களின் எண்ணிக்கை 2 ஆக பதியப்பட்டுள்ளது என்பதும், மரத்தினை பொதுமக்களால் துண்டித்து எடுத்து சென்று விட்டதால் அவற்றினை மதிப்பீடு செய்ய இயலவில்லை என்பதும், PF சாலையோரத்தின் கழிவு நீர் கால்வாய் தரமாக போடப்பட்டு, மூன்றாம் தரப்பினால் ஆய்வு செய்யப்பட்டு சான்றிதழ் அளிக்கப்பட்டதின்பேரில் தொகை பட்டுவாடா செய்யப்பட்டது என்பதும், இதில் முறைகேடு ஏதுமில்லை என்பதும் வேலூர் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி செயற்பொறியாளர் (ம) உதவி ஆணையாளர் (பி)–ன் அறிக்கை, வேலூர் மாநகராட்சி இளநிலை பொறியாளர் மற்றும் வேலூர் மாநகராட்சி ஆணையரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தனது வாக்குமூலத்தில் வேலூர் மாநகராட்சி. சத்துவாச்சாரி வார்டு எண்.21–ல் PF சாலை அரிஓம் 4வது தெருவில் உள்ள கட்டிடங்கள் மற்றும் கமர்சியல் Complex கட்டிட ஆக்கிரமிப்பு செய்ததினால் சாலை அகலம் சுருங்கிவிட்டது என்றும், இச்சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றாமல் இருபுறமும் கால்வாய் கட்டியும், சாலையும் அமைத்துள்ளனர் என்றும், E.B. சாலையில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியில் பொது இடங்கள் பூங்கா மற்றும் சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்பு குறித்து வேலூர் Distrct Court (JM2)ல் வழக்கு CC எண்.343/2014 மற்றும் 344/2014 தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்காண் சூழ்நிலையில், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,
Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;

(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான பொருட்பாடு தொடர்பாக நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. R.P.இரமேஷ்,
கதவு எண் 484, சத்துவாச்சாரி,
Phase-3 வள்ளலார்,
வேலூர்–632 009.

(2) ஆணையர்,
வேலூர் மாநகராட்சி, வேலூர்.

(3) உதவி செயற்பொறியாளர் (ம) உதவி ஆணையர் (பி),
மண்டலம் 2, வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 0028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

10/3/26
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032